WYMAN
ENGLISH LANGUAGE
INSTITUTE
'TOEFL' Classes
For 86-87 Exams
WEEK DAYS
Mon. | Friday;
11 30 a.m - 1.00 p.m.
WEEK ENDS
Sat.|Sunday;
9.00 a.m. - 10.30 a.m.
Instructor 12, Wyman Rd.,
S.B.IYAR Nallur.

Nallur Branch Library

Registered as a Newspaper

உதயன்

விலை ரூ. 1/-

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

சுடர்:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆடி மீ 25 ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1406 ஜுல்ஹஜ் பிறை 3 (10-08-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:- 226

WYMAN
ENGLISH LANGUAGE
INSTITUTE
ENGLISH READING
PRACTICE CLASSES
(Books Year 9th. 10th.11th,12th)
WEEK DAYS
Mon, | Friday; 3-4 p.m.
WEEK ENDS
Sat. | Sunday; 6-7 a.m.
10.30-11.30a.m.
Instructor 12. Wyman Rd.,
S. B. IYAR Nallur.

நேரடி நடவடிக்கை:

சு. க. தீவிர முஸ்தீபு

மாகாண சபையை எதிர்த்து

கொழும்பு, ஆகஸ்ட் 10

சர்வசன வாக்கெடுப்பு ஒன்றை நடத்தாமல் மாகாண சபைச் சட்டத்தைக் கொண்டு வந்தால் அதை எதிர்த்து நேரடி நடவடிக்கை இயக்கம் ஒன்றை நடத்துவது பற்றி சுதந்திரக் கட்சி, பௌத்த மதத் தலைவர்களுடன் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றது.

சத்தியாக்கிரகம், உண்ணாவிரதம், ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் ஆகியவை யாக இந்த நேரடி நடவடிக்கை அமையலாம் என்று கூறப்படுகிறது.

மாகாணசபைச் சட்டத்தை எதிர்க்கும் சகல அமைப்புக்களுடனும் சுதந்திரக்கட்சி தொடர்பு கொண்டுள்ளது.

சகல எதிர்ப்புச் சக்திகளையும் ஒன்று திரட்டி நேரடி நடவடிக்கையில் இறங்குவதற்கான தீவிர முயற்சியில் சுதந்திரக் கட்சி ஈடுபட்டு வருவதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் மூலம் தெரிய வருகிறது.

மல்வத்தை பீடாதிபதியையும் சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்கா நேற்றுக் கண்டியில் சந்திப்பதாக இருந்தது.

(அ-எ)

கிளிநொச்சி: மீண்டும் குண்டுவெடிப்புகள்

கிளிநொச்சி, ஆக 10

கிளிநொச்சியில் கடந்த ஒரு சில தினங்களாக மீண்டும் குண்டு வெடிப்புச் சத்தங்கள் கேட்க ஆரம்பித்துள்ளன.

கடந்த 7 ஆம் திகதி இரவும் 8 ஆம் திகதி இரவும் நாலில் பாரிய குண்டு வெடிப்புச் சத்தங் (4-ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



மாகாண சபைக்கு ஆதரவு தெரிவிச்ச தென்னிலங்கைத் தலைவர்மார் வீட்டிலே இனி அடிக்கடி குண்டு இருக்குமோ பின்னை...

ஜே. ஆர். -- டிக்ஸிற் சந்திப்பில்

தமிழ் மொழிப் பிராந்திய விவகாரம் பிரஸ்தாபம்

கொழும்பு, ஆக. 10

தமிழ்மொழி பிராந்தியம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற யோசனை குறித்து ஜனாதிபதி ஜெயவர்த்தன — இந்தியத் தூதர் டிக்ஸிற் சந்திப்பில் பிரஸ்தாபிக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது.

தமிழ் மொழிப் பிராந்தியம் ஒன்றை உருவாக்கி அதன் அடிப்படையில் தான் அதிகாரப்பகிர்வுகள் இடம்பெறவேண்டும் என்பதில் தமிழர் விடுதலைக் கூட்டணி மிகவும் உறுதியாக நிற்பதாக அச்சந்திப்பின்போது ஜனாதிபதிக்குத் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு மாகாணத்துடன் கிழக்கு மாகாணத் (4 ஆம் பக்கம் பார்க்க)

கூட்டணியினர் 15 இல் கொழும்புவருகின்றனர்

சென்னை, ஆக 9

தமிழர் விடுதலைக் கூட்டணித் தூதுக்குழு இம் மாதம் 15 ஆம் திகதி மாலை கொழும்பு வரும். இப்படி கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தன.

இம்முறை வரும் கூட்டணித் தூதுக்குழுவில் புதிதாக மூதூர் முன்னாள் எம். பி. திரு அ. தங்கத்துரையும் இடம் பெறுகிறார். (இ-எ)

கட்டைபறிச்சானில்

ராணுவம் சுட்டு

தமிழ் அகதிகள் பலி

பாடசாலையில் தங்கியிருந்த வேளை நடந்த கொடுமை

திருகோணமலை, ஆக. 10

மூதூர், கட்டைபறிச்சானில் நேற்றுக் காலை இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் தமிழ் அகதிகள் உயிரிழந்தனர்.

ஒரு பெண் ஒரு குழந்தை உட்பட நான்குபேர் இச்சம்பவத்தில் பலியாகினர். சம்பவம் நடந்த சமயம் இவர்கள் சம்பூர் மகாவித்தியாலயத்தில் அகதிகளாகத் தங்கியிருந்தனர்.

கடந்த இரண்டாம் திகதி கட்டைபறிச்சானில் 40 வீடுகள் தீக்கிரையானதைத்தொடர்ந்து இடம்பெயர்ந்து சம்பூர் மகாவித்தியாலயத்தில் தஞ்சமடைந்தவர்களில் உயிரிழந்த நால்வரும் அடங்குகின்றனர்.

நால்வரின் மரணவிசாரணை மூதூரில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை இராணுவத்தினர் மீது போராளிகள் தாக்குதல் நடத்தியிருந்தனர்.

தாக்குதலில் படுகாயமடைந்த இரண்டு சிப்பாய்கள் அநுராதபுரம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டனர். (இ-எ-150)

தாக்குதலில் ஒருவர் காயம்

மட்டக்களப்பு, ஆக. 10

நேற்று முன்தினம் இரவு மட்டக்களப்புப் பொலீஸ் நிலையத்தில் இருந்து மேற்கொள்ளப்பட்ட சரமாரியான துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்த வேல் மாணிக்கம் என்பவர் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் நேற்று சேர்க்கப்பட்டார்.

இவரின் வயது 65. பிரதி பொலீஸ் மா அதிபர் அலுவலகத்துக்கு அருகில் இவர் தேநீர்க்கடை ஒன்று நடத்தி வருகிறார். (இ-எ-21)

புலிகள் அறிக்கை

யாழ்ப்பாணம், ஆக. 10

கட்டைபறிச்சானில் நேற்று நடைபெற்ற தாக்குதல் சம்பவம் குறித்து தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்த அறிக்கை வருமாறு!

நேற்றுக்காலை 8-30 மணியளவில் கட்டைபறிச்சான் இராணுவ முகாமில் இருந்து எம் மக்களை வேட்டையாடுவதற்காக 50 இராணுவத்தினர் அங்கிருந்து புறப்பட்டு 30 பேரளவில் நடைபவனியாக முன் செல்ல மிகுதிப்பேர் ஈ. எல் எப். வான் ஒன்றில் முகாமில் இருந்து 500 யார் தொலைவில் வந்துகொண்டிருந்தனர்.

அப்போது எமது அப்பிரிவினர் வான்மீது ரொக்கட் லோஞ்சர் மூலமும், தானியங்கி துப்பாக்கிகள் மூலமும் தாக்கியதில் வான் முற்றாகச் சிதைக்கப்பட்டதுடன் தீப்பற்றி எரிந்தது.

அதில் வந்த அனைவ (4ஆம் பக்கம் பார்க்க)

மண் அள்ளிய அரச ஊழியரிடம் தண்டம்

கல்முனை, ஆக 10

கல்முனைக் கடற்கரையில் மண் அள்ளிய அரச ஊழியரிடம் தண்டப்பணமாக 400 ரூபா நேற்று இனந்தெரியாத இளைஞர்களினால் வசூலிக்கப்பட்டது.

அரச திணைக்களம் ஒன்றுக்குச் சொந்தமான டிராக்டரில் இம்மண் ஏற்றப்பட்ட சமயம் இனந்தெரியாத இளைஞர்கள் அதனைத் தடுத்தனர்.

விதித்திருந்த வேலை (4ஆம் பக்கம் பார்க்க)

வடபகுதியைச் சேர்ந்த

இரு வர்த்தகர்கள் கடத்தப்பட்டனர்!

செங்கலடியில் சம்பவம்

மட்டக்களப்பு, ஆக. 10

செங்கலடியில் நேற்றுக் காலை வடபகுதியைச் சேர்ந்த இரண்டு வர்த்தகர்கள் கடத்தப்பட்டனர்.

கடத்தப்பட்டவர்களின் பெயர்கள் வருமாறு;

1 திரு. நாகேந்திரம், (48 வயது) மகாலட்சுமி ஸ்டோர்ஸ் உரிமையாளர். காரைநகர் வாசி.

2 திரு பாலசுப்பிரமணியம், (45 வயது) தெல்லிப்பளை வாசி. பாலா குறூப் உரிமையாளர்.

இவர்கள் இருவரும் நேற்றுக் காலை கடத்தப்பட்டனர்.

நேற்று முன்தினம் இரவு வாழைச்சேனையில் அரச அதிகாரி ஒருவரும் கடத்தப்பட்டார்.

மாவட்ட அபிவிருத்தி சபை முன்னாள் தலைவர் திரு. சம்பந்தமூர்த்தியின் தந்தையான சின்னத்தம்பி போடியார் இன்னும் விடுவிக்கப்படவில்லை. (இ-எ-21)

முஸ்லிம்களும் சிங்களவர்களும்

சேர்ந்தால் கிழக்கின்

நிர்வாகமும் எம் கையில்

பிக்குகள்கூட்டத்தில் ஜனாதிபதி

கொழும்பு, ஆக. 10

தேர்தல் ஒன்றில் முஸ்லிம்கள், சிங்களவருடன் சேர்ந்து வாக்களித்தால் கிழக்கு மாகாண சபையின் நிர்வாகம் திரு. அமிர்தலிங்கத்தின் டெலோ, ஈழம் வாதிகளின் கைகளுக்கோ நிச்சயம் போகாது. எமது கைக்கு வந்துவிடும்.

இப்படி ஜனாதிபதி ஜெயவர்த்தன சொன்னார்.

கொழும்பு ஜோன் டி சில்வா மண்டபத்தில் மகாசங்கத்தைச் சேர்ந்த பௌத்த பிக்குகளுக்கு ஜனாதிபதி அண்மையில் மாகாணசபை யோசனை பற்றி விளக்கிச்சொன்னார்.

ஜனாதிபதி ஜெயவர்த்தன மேலும் சொன்னதாவது!

நெப்போலியன் காலத்தில் இருந்து பிரான்ஸில் மாகாணசபைகள் உள்ளன.

ஆனால் சமஷ்டி அரசமைப்பு முற்றிலும் வேறுவிதமானது. மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இல்லாத முறையில் சுதந்திரமான அமைப்புக்கள் சமஷ்டி ஆட்சியின் நாட்டில் இயங்கும்.

ஒன்பது மாகாணங்கள் நாட்டில் உள்ளன. இவற்றில் எல்லாவற்றிலும் மாற்றம் எமக்கு இல்லை. வடக்கு, கிழக்கு ஒன்றாக இணைக்கப்பட வேண்டும் என்று கூட்டணி விரும்புகிறது. எமக்கு அதில் விருப்பம் இல்லை. வடக்குடன் இணைந்து செயல்பட கிழக்கு விரும்பவில்லை.

பிழை என்ன?

அரசமைப்புச் சட்டத்துக்கு கொண்டுவரப்படும் திருத்தம் ஒன்றின் மூலம் ஒற்றை ஆட்சி அமைப்புக்கு பங்கம் ஏற்படாமல் மாகாண (4 ஆம் பக்கம் பார்க்க)

மினி வான் பறிமுதல்

கல்முனை, ஆக 10

கொள்ளை ஒன்றுக்கு பயன்படுத்தப்பட்டதாகக் கூறி தமிழர் ஒருவருக்குச் சொந்தமான மினி வான் ஒன்றை கல்முனையில் ஆயுதப் படையினர் நேற்றுக் கைப்பற்றினர்.

பாண், பிஸ்கட் ஏற்றி வந்த இந்த வான் ஒந்தாச்சிமடத்தில் வைத்து ஆயுதப்படையினரால் வழி மறிக்கப்பட்டது.

வானினுள் இருந்த பாண், பிஸ்கட் முதலியவற்றை வீதியில் தூக்கி எறிந்து விட்டு படையினர் வானை எடுத்துச் சென்றனர்.

தமிழர்களான சாரதியும் கிளீனரும் கல்முனைப் பொலீஸில் ஒப்படைக்கப்பட்டனர். (இ-எ-84)

குமாரணதுங்க வீட்டிலும் குண்டு

கொழும்பு, ஆக 10

மக்கள் கட்சித் தலைவர் விஜய குமாரணதுங்கவின் கொழும்பு சுதவாக்காடு இல்லம் அமைந்துள்ள வீதியில் உள்ள வீட்டில் நேற்று குண்டு ஒன்று கண்டு பிடிக்கப்பட்டு செயல் இழக்கச் செய்யப்பட்டது.

நேற்று இரவு ஏழுமணி அளவில் குண்டு கண்டு பிடிக்கப்பட்டது.

சமசமாஜக்கட்சித் தலைவர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா வீட்டிலும் வெடிக்காத நிலையில் குண்டு ஒன்று கண்டு பிடிக்கப்பட்டது தெரிந்ததே. (இ-1)

சுபநேரம்

10—8—1986

ஞாயிற்றுக்கிழமை

சுபநேரம்:-

9.04 முதல் 10.34 வரை

ராகுகாலம்:-

4.34 முதல் 6 04 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

● 8 ஆவது தடவை நடந்த கொள்ளை

கல்முனை, ஆக 10

கல்முனை பிரதம தபால் அலுவலகம் எட்டாவது தடவையாக நேற்றுப் பிற்பகல் கொள்ளை இடப்பட்டது.

இனந்தெரியாத இளைஞர் கோஷ்டி ஆயுதங்களுடன் புகுந்து இக்கொள்ளையை நடத்தியது.

சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான முத்திரைகள், பணம் முதலியன கொள்ளை இடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-எ-84)

நல்லைக் கந்தன் ஆலய கொடியேற்றம் இன்று

யாழ்ப்பாணம், ஆக. 10

சரித்திரப்புகழ் வாய்ந்த நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று கொடியேற்ற வைபவத்துடன் அருள்மயமான சூழ்நிலையில் ஆரம்பமாகிறது.

கொடியேற்றத்துக்குப் பாவிக்கப்படும் கொடிச்சீலை பாரம்பரிய மரபிற்கு இணங்க, செங்குந்த மரபினரால் நேற்றுக் காலை சட்டநாதர் ஸ்ரீ முருகன் ஆலயத்தில் இருந்து தேர் ஒன்றில் கொண்டு வரப்பட்டு நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் ஒப்படைக்கப்பட்டது.

இன்று ஆரம்பமாகும் வருடாந்த மகோற்சவம் தொடர்ந்து 25 தினங்கள் நடைபெறும்.

பக்தர்கள் இம்முறை உற்சாகத்துடன் ஆலயப் பணிகளில் சுறுசுறுப்பாக ஈடுபடுகின்றனர். வீதிகள் பலவற்றிலும் பந்தல்கள் அமைக்கப்பட்டுள்ளன.

திருவிழாக் காலங்களில் ஆலயத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஒழுங்கு பாதுகாப்பு முதலியவற்றை நிலைநாட்டும் பணியில் (4ஆம் பக்கம் பார்க்க)

"மட்கோவ்" பிரிவு தாக்குதலுக்குஈ.பி.ஆர்.எல்.எப். உரிமை கோருகிறது

யாழ்ப்பாணம், ஆக 10

திருகோணமலை துறைமுக அதிகாரசபையின் "மட்கோவ்" பிரிவின் மீது கடந்த புதன்கிழமை நடத்தப்பட்ட தாக்குதலுக்கு ஈ. பி. ஆர். எல். எவ். உரிமை கோரி உள்ளது.

இதுசம்பந்தமாக ஈ.பி. ஆர். எல். எப். நேற்று விடுத்த அறிக்கை வருமாறு!—

திருகோணமலை துறைமுக அதிகாரசபையின் "மட்கோவ்" பிரிவின் மீது கடந்த 6ஆம் திகதி அதிகாலை மேற்கொள்ளப்பட்ட தாக்குதல், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மக்கள் விடுதலைப் படையினரால் மேற்கொள்ளப்பட்டது.

இத்தாக்குதல் சிறிலங்கா அரசின்மீது மேற்கொள்ளப்பட்ட "பொருளாதார அழிவு"த் தாக்குதலாகும்.

இத்தாக்குதலால் அரசிற்கு 2கோடி ரூபாவுக்கு மேல் நஷ்டம் ஏற்படுத் (4-ஆம் பக்கம் பார்க்க)

கண்ணிவெடியில் 3 சிப்பாய்கள் பலி!

கொழும்பு ஆகஸ்ட் 10

போராளிகள் வைத்த நிலக்கண்ணி ஒன்று வெடித்ததால் 3 சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். ஒருவர் காயம் அடைந்தார்.

இச்சம்பவம் வெள்ளிக்கிழமை மொரவெவவுக்கும் திரியாய்க்கும் இடையில் இடம் பெற்றது.

சிப்பாய்கள் நடைபவனியில் சென்று கொண்டிருந்த போதே கண்ணிவெடித் தாக்குதலுக்கு உள்ளானார்கள்.

இச்சம்பவத்தை அடுத்து ஆயுதப்படையினர் அப்பகுதியில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். (இ)

V. I. P. EXPRESS
மீண்டும் ஆரம்பம்
அநேக மக்களின் வேண்டுகோளுக்கிணங்க
யாழ் - நெல்லியடி - கொழும்பு பஸ்சேவை
11-8-86 திங்கள் முதல் ஆரம்பமாகின்றது
யாழ்ப்பாணம் 7-15 A. M.
நெல்லியடி 7-45 A. M.
ஆசனப் பதிவு:
மொடேர்ன் ஸ்ரோர்ஸ் நெல்லியடி
றேயல் பார்சல், யாழ்ப்பாணம்.
கட்டணம் ரூபா 150-00
யாழ்ப்பாணம் — வவுனியா — யாழ்ப்பாணம் 50.-

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

பரீட்சை நிலையங்களின் ஊழியர் கொடுப்பனவு

தாமதமாகலாம்

காங்கேசன்துறை, ஆக. 10

பரீட்சை நிலையங்களில் கடமையாற்றும் ஊழியர்களின் கொடுப்பனவுகள் கல்வி அமைச்சால் நேரடியாக வழங்கப்பட இருப்பதால் கொடுப்பனவுகளைப் பெறுவதில் தாமதம் ஏற்படலாம்.

அரசாங்கப் பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்படும் பரீட்சைகளில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு இதுவரை காலமும் பிராந்தியக் கல்வித் திணைக்களம் மூலமே கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வந்தன.

ஆனால் தற்சமயம் நடைபெறும் ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சையில் இருந்து இனிக் கல்வி அமைச்சே நேரடியாக அவர்களின் கொடுப்பனவுகளை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது

இதனால் பரீட்சை நிலையங்களில் பணிபுரிவோரின் கொடுப்பனவுகள் தாமதமாகவே கிடைக்கும் நிலை உருவாகியுள்ளதாக அறியவருகிறது. (இ-68)

மதுவரி ஊழியரின் பரிதாபநிலை

பலாலி, ஆக. 10

கடந்த வருடம் புதிதாக நியமனம் பெற்று வடபகுதியில் பயிற்சி பெறும் மதுவரித் திணைக்களப் பாதுகாவலர்கள் மற்றும் பரிசோதகர்கள், தமது பயிற்சிக்காலம் முடிந்தபின்பு சேவையில் நிரந்தரமாவதற்கான பரீட்சையில் தோற்ற முடியாமையால் சம்பள உயர்வு பெறமுடியாதுள்ளனர்.

வடபகுதியில் அடிக்கடி நிலவும் அசம்பாவிதங்களால் இவர்களுக்காக ஒழுங்கு படுத்தப்பட்ட இரண்டு பரீட்சைகளிலும் இவர்களால் தோற்ற முடியவில்லை (இ-119)

வீண் இழப்புகளைத் தவிர்க்க

சிபார்சு செய்யப்பட்ட விதைகளை விநியோகியுங்கள்

யாழ்ப்பாணம், ஆக. 10

விவசாய ஆராய்ச்சியினரால் சிபார்சு செய்யப்பட்ட நல்ல இன மரக்கறி விதைகளை விநியோகிக்கும்படி தனியார் விதை விநியோகஸ்தர்களை விவசாய விரிவாக்கப்பகுதி கேட்டிருக்கிறது.

சென்ற போகங்களில் சிபார்சு செய்யப்படாத விதைகள் விநியோகிக்கப்பட்டதால் அவற்றை நட்ட விவசாயிகள் உரிய பலனைப் பெற முடியாமல் நஷ்டம் அடைந்தனர்.

இம்முறை இத்தகைய இழப்புகளைத் தவிர்ப்பதற்காக விதைச் சமக்காரர்களுக்கும், விநியோகஸ்தர்களுக்கும் முன்கூட்டியே சிபார்சு செய்யப்பட்ட இனங்கள் குறித்து விளக்கமளிக்கப்பட்டது.

இது தொடர்பான கூட்டம் ஒன்று விவசாய விரிவாக்கப் பகுதியினரால் கடந்த 31 ஆம் திகதி உதவி விவசாயப் பணிப்பாளர் திரு. எஸ். கிருஷ்ணபிள்ளை தலைமையில் நடைபெற்றது.

விதைகளைக் கொள்வனவு செய்யும் பொழுது பழைய இருப்பு விதைகளைத் தவிர்த்து புதிய முளைதிறன் உள்ள விதைகளை தருவிக்குமாறும்— புரட்டாசி மாதம் தொடக்கம் விவசாயிகள் பெறக்கூடிய வகையில் அவற்றை விநியோகிக்கும்படி விதை விநியோகஸ்தர்களை விவசாய விரிவாக்கப் பகுதியினர் கேட்டுக் கொண்டிருக்கின்றனர்.

யாழ் மாவட்டத்திற்கு உகந்த சிபார்சு செய்யப்பட்ட இனங்கள் வருமாறு:—

கோவா— கே வை. குரொஸ், எ எஸ். குரொஸ், அஜோசா
பீற்றூட்— கிறிம்சன் குளோப், ரொம்மாக்கற், டெற்றோயிட் டாக் றெட்
கரட்— கூரின் காவ் லோங், ரொப் வெயிட் கேப் மார்க்கற்
பூக்கோவா— ஏளி பட்ணு
லீக்ஸ்— லாஜ் லோங் சமர்
சலாது— கிருன்ட் றப்பிட்
குறிமிளகாய்— கலிகோனியன் வெலோ வண்டர்
தக்காளி— மாகுலோம், றோமா
செடிபோஞ்சி— ரொப் குறொப், வேட் (உ)

பூர்த்தி செய்யுமாறு பணிப்புரை

காங்கேசன்துறை ஆக. 10

யாழ் மாவட்டப் பாடசாலைகளின் அபிவிருத்திக்காகச் சுவீகரிக்கப்பட்ட காணிகள் பலவற்றின் சுவீகரிப்பு வேலைகள் பூர்த்தி அடையவில்லை. அவற்றை விரைவாகப் பூர்த்தி செய்யுமாறு கல்வி அமைச்சுச் செயலாளர் பணித்துள்ளார்.

கல்வி அமைச்சின் செயலாளர் திரு. விஜயமானாவால் அனுப்பப்பட்ட சுற்று நிருபத்திலேயே மேற்படி பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

யாழ் பிரதம கல்வி அதிகாரி திரு. க. கந்தசாமி மேற்படி வேலைகளை கவனித்து வருகிறார். (உ-68)

சட்ட வைத்திய அதிகாரி இல்லை

யாழ்ப்பாணம், ஆக. 10

யாழ் மாவட்டத்திற்கு கடந்த ஒன்றரை வருடங்களாக சட்ட வைத்திய அதிகாரி எவரும் இல்லை. புதிதாக எவரையும் நியமிக்க முயற்சிகள் எடுக்கப்படுவதாகவும் தெரியவில்லை.

கடைசியாக டாக்டர் சுப்பிரமணியம் சட்ட வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றியிருந்தார் (உ-10)

தேவை

உயர்குல வேளாள இந்து 33 வயதுடைய படித்த அழகான குடும்பப் பாங்கான மணமகளுக்கு தகுந்த வரன் கோரப்படுகிறது. சீதனமாக பணமும் நகையும் கொடுக்கப்படும். 7-இல் செவ்வாய் காணப்படுகிறது.

விளம்பர இல 30
மே/பா. உதயன்
யாழ்ப்பாணம்.

குட்டிமணி மற்றும் தமிழ் கைதிகளின் கொலைகள்

சிறில் மத்தியூ கோஷ்டியின் சதி

நீதிமன்றில் சிங்கள இளைஞர்

கொழும்பு, ஆக. 10

வெலிக்கடைச் சிறையில் குட்டிமணி உட்பட 52 தமிழ்க் கைதிகள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம், சிறில் மத்தியூ, ரோஜாஸ் ஜயசேகரா, சோமவல சுனில் ஆகியவர்களின் திட்டமிட்ட சதியின் விளைவே.

— இப்படி ஹென்றி பெரேரா தன் மீதான வழக்கு விசாரணையில் சாட்சியம் அளிக்கையில் தெரிவித்தார்

கொழும்பு மேல் நீதிமன்றத்தில் மேல் நீதிமன்ற நீதிபதி திரு. எச். டபிள்யு சேனநாயக்கா முன்னிலையில் இவர் மீதான வழக்கு விசாரிக்கப்பட்டு வருகின்றது.

ஹென்றி பெரேரா, பொலீஸ் அதிபர் சந்திரா ஜெயவர்த்தனவுக்குக் கொடுத்த வாக்குமூலம் செல்லுபடியானதா?

அது சம்பந்தமான விசாரணையில் ஹென்றி பெரேரா சாட்சியம் அளித்தார்.

அப்போது அவர் சொன்னதாவது;

என்னை லெனின், விஸ்வன் என்று அழைப்பார்கள்.

எனது பாட்டனார் எனக்கு வைத்த பெயர் தான் லெனின்.

ஏன் எனக்கு லெனின் என்று பெயர் வைக்கப்பட்டது என்பதை என் பாட்டனாரிடம் தான் கேட்க வேண்டும்.

என்னை விஸ்வன் என்றும் அழைப்பர்.

13-7-1979 இல் கோரமான முறையில் கொல்லப்பட்ட விஸ்வஜோதி ரத்தினம் எனது நல்ல நண்பன். தமிழீழ மக்கள் விடுதலைக் கழக உறுப்பினன் நான். கழகமே எனக்கு விஸ்வன் என்று பெயர் வைத்தது

இருவரும் திராவிட பரம்பரை

தமிழரும்-சிங்களவரும் திராவிட பரம்பரையில் வந்தவர்கள். அவர்கள் இடையே வித்தியாசம் இல்லை.

மத்திய இந்தியாவில் விந்திய மலைக்கு தெற்கே வாழ்ந்த அனைவரும் திராவிடர்களே

தமிழ் இளைஞர்களை இலங்கை அரசிடம் ஒப்படைக்க வேண்டாம் என்று நான் இந்தியத் தூதர் மூலம் இந்திய அரசைக் கேட்டுக் கொண்டேன் அதன் உண்மை 1983 இல் வெலிக்கடையில் 52 தமிழ்க் கைதிகள் கொல்லப்பட்ட சம்பவத்தில் வெளியானது.

சிங்களக் கைதிகள் சிங்கள சிறைச்சாலை அதிகாரிகளுடன் சேர்ந்து தமிழ்க் கைதிகளை கொலை செய்தார்கள் என்று நான் கூறமாட்டேன். அப்படிச் செய்திருந்தால் அவர்களை சிங்களவர்கள் என்று அழைக்க முடியாது. அவர்கள் சந்தர்ப்பவாதிகள் —

அரச சட்டத்தரணியின் குறுக்கு விசாரணையின்போது ஹென்றி பெரேரா மேற்கண்டவாறு சொன்னார். (உ-ஏ)

மக்கள் முகம்

அகதிகள் புனர்வாழ்வுக் கழகம்

யாழ்ப்பாணம், ஆக. 10

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட வேலணை பிரஜைகள் குழு அகதிகள் புனர் வாழ்வுக் கழகம் ஒன்றை உருவாக்கியுள்ளது.

இக்குழுவின் அங்குரார்ப்பணக் கூட்டம் வேலணை பிரஜைகள் குழு அலுவலகத்தில் இடம் பெற்றது.

கூட்டத்தில் பின்வருவோர் அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்:- திரு. டி. விக்டர் செல்வம் வேலணை கிழக்கு, உபதலைவர்கள்:- திரு ஐ. க. திருவிளங்கம் புங்குடு தீவு-மத்தி, திரு செ. நடேசபிள்ளை அல்லைப்பிட்டி.

செயலாளர்:- திரு க. தவராசா புங்குடு தீவு மேற்கு, உப செயலாளர்- திரு ப. சேனநாதன் சரவணை கிழக்கு, பொருளாளர்:- திரு. எஸ். ஐ. தனபாலசிங்கம் வேலணை மேற்கு (இ)

'இன்சுலின்' மருந்தைத் தருவிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஆக. 10

"இன்சுலின்" மருந்து வகைகள் உடனடியாகவே கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்குத் தருவிக்கப்படும். இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இதேவேளை கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக வவுனியாவில் தேங்கிக் கிடக்கும் வடபகுதிக்கான மருந்து வகைகளை உடனடியாக இங்கு கொண்டு வருவதற்கு யாழ்-சுகாதாரத் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்த மருந்துகளில் சக்தி கூடிய இன்சுலின் மருந்துகள் இல்லை என்றும்-

அவை நேரடியாகக் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்படும் என்றும் சுகாதாரத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-10)

பரீட்சை இன்று

உருத்திரபுரம், ஆக. 10

ஆறும் ஆண்டுபுலமைப் பரிசில் பரீட்சை இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகும். (உ)

புதிய மாணவர்களுக்கான ஆங்கில வகுப்புகள் பிற்போடப்படுதல்

புதிய மாணவர்களுக்கு நடாத்தப்பட்ட ஆங்கிலத் தகுதிகாண் பரீட்சையின் முடிவுகள் இம்மாதம் 20 ஆம் திகதி பல்கலைக் கழகத்தில் அறிவிக்கப்படும்

ஆங்கில வகுப்புகளும் 20 - 08 - 86 இல் ஆரம்பமாகும்

பதிவாளர்

நீத்தார் பட்டியல்

வரப்பிரசாதம் அன்னம்மா

பலாலி வடக்கு வரப்பிரசாதம் அன்னம்மா 8-8-86 அன்று காலமானார். இவர் காலஞ்சென்ற களியார் வரப்பிரசாதம் (சீனியர்) அவர்களின் அன்பு மனைவியும், பிரபல பிரமுகரும் சம்மாட்டியுமான திரு ஆரோக்கியநாதனின் அன்புத்தாயாரும் மரியநாயகியின் அன்பு மாமியாரும், ஞானநாதன், அமலதாசன், ஜெனோவா, ஜெனிஸ்ரெலா, ஜெசிந்தா, ஜெயசீலி ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார் அன்னாரின் பூதவுடல் இன்று மாலை 4 மணிக்கு அவரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு பலாலி பொதுச் சேமக்காலையில் அடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்; S. ஜேகமணி

பிரயாண ஒழுங்குகள்

★ ஹொலண்ட்
★ பெல்ஜியம்
★ பிரான்ஸ்
★ ஜேர்மன்
★ கனடா

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும்
மற்றும்
பாஸ்போட், விசா,
பொன்ட், (BOND) ரிக்கட்
ஆகியனவும்
செய்துகொடுக்கப்படும்.

INTERSUN GROUP

சின்னத்தம்பி அவெனியூ,
(மகளிர் கல்லூரிக்கருகாமையில்)
மானிப்பாய்.

மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

ஏமாந்து விடாதீர்கள்

படையினர் நடிக்கிறார்கள்

புலிகள் விடுத்த அறிக்கை

யாழ்ப்பாணம், ஆக. 10

"பொதுமக்களாகிய உங்களை எங்களுக்கு எதிராகத் திருப்புவதற்காக உங்களிடம் அன்பாகப் பழகுவது போல படையினர் நடிக்கிறார்கள் அவர்கள் நடிப்பைக் கண்டு ஏமாந்து விடாதீர்கள்"

வன்னி மக்களுக்கு விடுதலைப் புலிகளின் வேண்டுகோள் என்ற தலைப்பில் தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்த ஓர் அறிக்கையில் இப்படித் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழ் மக்களின் தாய்ப் பூமி மெல்ல மெல்ல சுவீகரம் செய்யப்பட்டு வருகிறது.

ஆரம்பத்தில் குடியேற்றம் என்ற போர்வையில் வன்னிப்பிரதேச எல்லைக் கிராமங்கள் ஆக்கிரமிக்கப்பட்டன. ஆயுதம் தாங்கிய குண்டர் கூட்டம் வன்னிப்பகுதியில் குடியமர்த்தப்பட்டது இறுதியில் படையினர் தமிழர் வேட்டையில் இறங்கினர்.

நூற்றுக்கணக்கான பொது மக்கள் கொல்லப்பட்டனர். கிராமங்கள் அழிக்கப்பட்டன. வயல்கள் நாசமாக்கப்பட்டன. கடைகள் எரிக்கப்பட்டன. கொலை, கொள்ளை, தீவைப்பு, கற்பழிப்பு இப்படியாக சதா தொடர்ச்சியாக வன்னி மக்களின் வாழ்வை சீர்குலைக்க முற்பட்டனர்.

வன்னி மாநிலத்தைச் சிதைக்க முயன்றவர். வன்னியில் இருந்து தமிழ் மக்களை விரட்டியடிக்கும் நோக்கமாகவே இந்தப் பயங்கரமான அட்டூழியங்களைக் கட்டவிழ்த்து விட்டனர்.

நாம் இரத்தம் சிந்துவதும் எமது உயிரை அர்ப்பணித்துப் போராடுவதும் தமிழ்மக்களாகிய உங்களுக்காகவே. உங்கள் பாதுகாப்பிற்காகவே வீரவரலாறு கொண்ட வன்னி இராச்சியம் மாற்றான் கையில் சிக்காமல் இருப்பதற்காகவே நாம் போராடுகின்றோம் எமது தொடர்ச்சியான தீவிரமான தாக்குதலால் பெரிய உயிர்ச் சேதத்தை எதிர்நோக்கிய படை செய்வதறியாது திகைத்தது. மக்களின் நல்லாதரவு எமக்கு இருக்கும்வரை [illegible] அவர்கள் உணர்ந்து கொண்டனர். இதன் காரணமாக இப்பொழுது ஒரு புதிய தந்திரோபாயத்தைக் கையாண்டு வருகின்றனர்.

பொதுமக்களாகிய உங்களை எமக்கெதிராகத் திருப்புவதுதான் இந்தத் தந்திரோபாயம் இதன் பொருட்டு படையினர் உங்களிடம் அன்பாகப் பழகுவது போல் நடித்துக் கொண்டிருக்கிறார்கள். உங்களது துன்பத்திலும் துயரத்திலும் அக்கறை கொண்டவர்கள் போல அனுதாபம் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். உங்களது பிள்ளைகளின் கல்வி பாழாகுவதாக முதலைக் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

தாம் தமிழ் மக்களின் பாதுகாப்புப்படைகள் என்றும் தமிழ் மக்களைப் பயங்கரவாதிகளிடம் இருந்து காப்பாற்ற வந்தவர்கள் இரட்சகர்கள் என்றும் பொய் சொல்லி துண்டுப்பிரசுரங்கள் வெளியிடுகிறார்கள். சிலருக்கு அரிசி வழங்குகிறார்கள். சிலருக்கு மருந்து வழங்குகிறார்கள். அன்புகாட்டி அபாரமாக நடிக்கும் தமது [illegible] (உ)

அரசஅதிபரின் சாரதி குடும்பத்துக்கு நிதி உதவி

யாழ்ப்பாணம், ஆக. 10

ஜூன் மாதம் கிளிநொச்சியில் வைத்துப் படையினரால் கொல்லப்பட்ட யாழ் அரச அதிபரின் சாரதி எஸ். அருள்நாதன் குடும்பத்தினருக்கு அரச செயலக ஊழியர்களால் நிதி உதவி வழங்கப்படவுள்ளது.

யாழ் செயலக ஊழியர்களிடமும், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலுள்ள ஊழியர்களிடமும் இந்நிதி உதவிப் பணம் செயலக பாதுகாப்பு நலன்புரிச் சங்கத்தால் சேர்க்கப்பட்டது.

இவ்விதம் சேர்க்கப்பட்ட 16,014 ரூபாவையும் காலஞ்சென்றவரின் மனைவியாரிடம் அரசஅதிபர் கையளிப்பார். (இ-5(

அகதிகளுக்கு உதவி

யாழ்ப்பாணம், ஆக. 10

கிளிநொச்சி அசம்பாவிதங்களால் பாதிக்கப்பட்டு யாழ். மாவட்டத்திற்கு அகதிகளாக இடம் பெயர்ந்து வந்த 300 குடும்பங்களுக்கும் ஒரு வார நிவாரண உதவி உணவுப் பொருட்களை வழங்க அரச அனுமதி வழங்கியுள்ளது.

(உ-5)

சேகரியுங்கள்!
சேகரியுங்கள்!! சேகரியுங்கள்!!!

ரொபின் பிரான்ட் சோப் வகைகளின் மேலுறைகளைச் சேகரித்து கவர்ச்சியான பெறுமதிவாய்ந்த பரிசுகளைப் பெறுங்கள்.

பங்குபற்றும் முறை

10 ரொபின் பார் சோப் மேலுறைகளையோ அல்லது 20 ரொபின் அரை பார்சோப் மேலுறைகளையோ அல்லது 50 ரொபின் வைட்சோப் மேலுறைகளையோ அல்லது 50 ரொபின் நீல சோப் மேலுறைகளையோ சேகரித்து, உங்கள் முழுப் பெயர், விலாசம் ஆகியவற்றை 5"X2½" அங்குல வெள்ளைக் கடதாசியின் ஒரு பக்கத்திலும், நீங்கள் சவர்க்காரம் வாங்கிய கடையின் பெயர், விலாசம் ஆகியவற்றை மறுபக்கத்திலும் எழுதி அனுப்பவேண்டும்.

பரிசுகள்.

1ம் பரிசு நெசனல் 2 in one set
2ம் பரிசு நெசனல் றேடியோ
3ம் பரிசு சுவர்க்கடிகாரம்

ஒவ்வொரு பரிசைப் பெறுபவரும் ரொபின் பிரான்ட் சவர்க்காரம் வாங்கிய கடைக்கு கீழ்க் கண்ட பரிசுகள் வழங்கப்படும்.

வியாபாரிகளின் பரிசுகள்

1ம் பரிசு சுவர்க்கடிகாரம்
2ம் பரிசு Air Pot Cooling
3ம் பரிசு Thermos சுடுதண்ணீர்ப்போத்தல்

இம் மேலுறைகளை சேகரித்து டிசம்பர் மாதம் 25ம் திகதிக்கு முன்பாக கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பவும்.
பரிசு இழுப்பு 5ம் திகதி ஜனவரி மாதம் 1987ம் ஆண்டு 9 மணிக்கும் 10 மணிக்கு மிடையில் நடைபெறும்.

அனுப்பும் விலாசம்:

த பெனின்சுலா குரூப்
நம். 9, கண்டி வீதி,
நாவற்குழி.

பெனின்சுலா சவர்க்கார தொழிலகத்தின் ஊழியர்கள் இப்போட்டியில் பங்கு பற்ற முடியாது.

உதய சங்கற்பம்

நன்று கருது
நாளெல்லாம் வினை செய்.

—மகாகவி பாரதியார்

உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல. 15 2வது ஒழுங்கை தொலைபேசி 24805
மின்சார நிலைய வீதி, 22073
யாழ்ப்பாணம், 10-08-86 த பெ 23

புற்றுநோய் ஆபத்து

யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டங்களில் புற்றுநோய் பரவி வரும் வேகம் நெஞ்சை துணுக்குறச் செய்கிறது.

கடந்த ஐந்து வருட காலத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இந்நோயினால் பீடிக்கப்பட்டிருக்கிறார்கள் அவர்களில் சுமார் 500 பேர் இறந்துவிட்டனர். யாழ் மாவட்டச் சுகாதாரப் பகுதி வெளியிட்டிருக்கும் இந்தப் புள்ளி விவரத் தகவல் கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய ஒன்று.

வருடாந்தம் நூறு பேர் புற்றுநோயினால் இறப்பது சிறிய விவகாரம் அன்று. இரண்டு மாவட்டங்களிலும் புற்று நோய் முதலாம் இலக்க ஆட்கொல்லியாகப் பரவி வருகிறது என்பதனையே அந்தப் புள்ளி விவரம் தெட்டென எடுத்துக் காட்டுகிறது

இந்த ஆபத்தான நிலையை நீக்குவது வைத்தியத் துறையினரதும், தமிழ் மக்கள் நலனில் அக்கறை உள்ள ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

எந்த நோயானாலும் அதன் ஆபத்தில் இருந்து தப்புவதற்கு இரண்டு வழிகள் உண்டு. ஒன்று: நோய் வந்த பின் சிகிச்சை செய்வது. இரண்டு: நோய்வராமல் தடுப்பது.

புற்றுநோயைப் பொறுத்த வரையில் அது வந்த பின் மாற்றுவது மிகவும் கஷ்டமானது. இந்த அணுகுண்டு யுகத்தில், புற்றுநோய்க்கு இன்னமும், நூற்றுக்கு நூறுவீதம் சித்திக்கக் கூடிய மருந்து எதுவும் கண்டறியப்படவில்லை.

எனினும் நோய் கண்ட ஆரம்ப காலத்தில் சிகிச்சை பெறுவதனால் மரண ஆபத்தை ஓரளவுக்காவது தவிர்க்கலாம்.

அதனைவிட மிகவும் சிறந்தது நோய்த் தடுப்பாகும். நோய்த் தடுப்பைச் சரிவரச் செய்வதற்கு அதற்கேற்ற பிரசாரம் தேவை.

புற்று நோய் வருவதற்கான முக்கிய காரணிகள் எவை? அந்நோயை ஒவ்வொருவரும் தூரத்தே வைப்பதற்கு எவற்றைத் தவிர்க்க வேண்டும்? உணவுப் பழக்கங்களில் செய்ய வேண்டிய மாற்றங்கள் எவை? நோய்க்கான ஆரம்ப அறிகுறிகள் என்ன?

இவ்வாறான பல அடிப்படை விடயங்கள் மக்களுக்குப் புகட்டப்பட வேண்டும். அதற்கான பிரசார வேலைகள் திட்டமிட்ட முறையில் நடத்தப்பட வேண்டும்.

இம்முயற்சியில் தொண்டர் ஸ்தாபனங்கள் முன்னின்று உழைப்பது அவசியம். அரசாங்கத்தை எதற்கும் எதிர்பார்க்கும் நிலை இப்போது இல்லை.

ஆகையால் சனசமூக நிலையங்கள், இளைஞர் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் சங்கங்கள், பிரசைகள் குழுக்கள் போன்ற கிராமமட்டத்திலான சமூக சேவை மன்றங்கள் ஊடாக புற்று நோய் தடுப்புப் பிரசாரம் முடுக்கிவிடப்பட வேண்டும்.

வட மாகாண புற்றுநோய் தடுப்புச் சங்கம் இதற்கான திட்டம் ஒன்றை வகுத்துச் செயற்படுத்தலாம் மாவட்டத்தில் உள்ள ஏனைய சமூக நல, சமூக சேவை மன்றங்கள் அதற்கு ஒத்துழைப்பு நல்குவது அவசியம்.

இதே வேளை புற்று நோய்ச் சிகிச்சைக்கான வசதிகளை இங்கு ஏற்படுத்துவதும் அத்தியாவசியமாகும். இலங்கையில் மஹரகமையில் தான் பிரதான புற்று நோய்ச் சிகிச்சை ஆஸ்பத்திரி இயங்குகிறது.

தமிழ்ப்பகுதிகளைச் சேர்ந்தோர் அங்கு சென்று சிகிச்சை பெறுவது என்பது இப்போதும், இனியும் இலகுவானதல்ல. ஆகையால் வடக்கில் பிரதான புற்று நோய்ச் சிகிச்சை நிலையம் ஒன்று மிக மிக அவசியமானது. அதுவும் இப்பகுதிகளில் புற்று நோய் பரவி வரும் வேகத்தைப் பார்க்கும் போது அது மிகக் கட்டாயமாகின்றது

தெல்லிப்பழையில் சிறிய அளவில் ஆரம்பிக்கப்பட்ட புற்று நோய்ச் சிகிச்சை நிலையம் இன்னும் சரிவர இயங்கத் தொடங்கவில்லை. சிகிச்சை வசதிகள் பூரணமாக இல்லை. அந்தக் குறைகளை நீக்கி, அதனைப் பூரணமாக இயங்க வைக்க எம்மத்தியில் உள்ள செல்வந்தர்களின் உதவி தேவை. அவர்களில் ஒரு சிலராவது கொடை வள்ளல்களாக மாறுவதற்கு மனம் மாற வேண்டும்.

பால் உற்பத்தியை ஊக்குவிக்க வேண்டும்

விற்பனை நிலைய திறப்பு விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஆக.10

யாழ்ப்பாணத்தில் தற்போது வளர்ந்துவரும் சிறு கைத் தொழில்களில் பால் உற்பத்தியும் ஒன்றாகும். அதனை ஊக்குவிப்பது அவசியமாகும்.

கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதியில் புதிய பால் விற்பனை நிலையம் ஒன்றைத் திறந்து வைத்து உரையாற்றிய யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு சி.வி.கே. சிவஞானம் இவ்வாறு சொன்னார்.

தற்பொழுது யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்யப்படும் பால் வகைகளை விற்பனை செய்குவதற் இப்படியான விற்பனை நிலையங்கள் இன்றியமையாதவை என்றும் அவர் சொன்னார்.

இத் திறப்புவிழாவின் போது மில்க் வைற் அதிபர் திரு. க. கனகராசா திட்டமிடல் பணிப்பாளர் திரு. சிவதாசன் ஆகியோர் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

இதேவேளை அன்றைய தினம் காலை இணுவிலில் பால் சேகரிப்பு நிலையம் ஒன்றும் திறந்து வைக்கப்பட்டது வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் அதனைத் திறந்து வைத்தார். (உ-10)

கிழக்கில் பெர்லின் வழியாக வரும்

அகதிகளை தடை செய்ய பிரான்ஸ் கோருகிறது

பாரிஸ், ஆக 9

மூன்றாவது உலகநாடுகளைச் சேர்ந்த அகதிகள் கிழக்கு பெர்லினிலிருந்து மேற்கு பெர்லினுக்குள் பிரவேசிப்பது தொடர்பாக பிரான்ஸ் உத்தியோகபூர்வமான முறையில் ரஷ்யாவிடம் முறைப்பாடு செய்துள்ளது

கிழக்கு பெர்லினிலிருந்து மேற்கு பெர்லினுக்குள் வரும் மூன்றாவது உலக நாடுகளின் அகதிகளை தடுத்து நிறுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரான்ஸ் ரஷ்யாவைக் கேட்டுள்ளது.

இந்த அகதிகளின் வருகை நிறுத்தப்படாவிட்டால் மேற்கு பெர்லினில் பல நெருக்கடிகள் தோன்றும் என்று பிரான்ஸ் எச்சரித்துள்ளது. (இ-ஒ)

பங்களாதேஷ் திருப்பி ஏற்கும்

பங்களாதேஷிலிருந்து இந்தியாவினுள் அத்துமீறி நுழைந்த 25 ஆயிரத்துக்கும் அதிகமானவர்களை திரிபுரா குடியேற்றப் பகுதியிலிருந்து மீண்டும் ஏற்றுக் கொள்வதென பங்களாதேஷ் இணக்கம் தெரிவித்துள்ளது.

அமெரிக்கா நிராகரித்தது

வாஷிங்டன், ஆக 9

ஒரு வருட காலத்திற்கு அணு ஆயுத பரிசோதனையை ஒத்திவைக்குமாறு மெக்ஸிக்கோ மாநாடு தெரிவித்த யோசனையை அமெரிக்கா நிராகரித்தது.

அமெரிக்காவிலும் ரஷ்யாவிலும் உள்ள அணுஆயுத பரிசோதனை நிலையங்களுக்கு அருகே கண்காணிப்பு நடவடிக்கையாக இயந்திர உபகரணங்களை நிர்மாணிக்க வேண்டும் எனவும் மெக்ஸிக்கோ மாநாடு தீர்மானித்தது.

இந்த யோசனை ஆபத்தான விளைவுகளை எதிர்நோக்கும் என அமெரிக்கா விளக்கம் அளித்தது. (இ-ஒ)

காஷ்மீர்ப் பகுதியில் பாக். விமானத் தளங்கள்

ஸ்ரீநகர், ஆக 9

காஷ்மீர் பகுதியில் மூன்று புதிய விமானத் தளங்களை பாகிஸ்தான் உருவாக்கி வருகின்றது

இத்தகவலை இந்திய பாதுகாப்பு துணை அமைச்சர் அர்ஜுன்சிங் வெளியிட்டார்.

பாகிஸ்தான் ஆக்கிரமித்துள்ள காஷ்மீர் பகுதியில் இவை அமையும்

மிகவும் சக்தி வாய்ந்த ராடர் கருவிகளை பாகிஸ்தான் அமெரிக்க உதவியுடன் பொருத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

—இவ்வாறு அந்தாவலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-ஒ)

வெளி உலகில்

போர் நிறுத்தம் வலியுறுத்து

ஈராக்குடனான போரை நிறுத்துமாறு அமெரிக்கா ஈரானை வற்புறுத்தியுள்ளது.

இவ் வாரம் சந்திப்பார்

விண்வெளி ஆயுதங்கள் மற்றும் அணுஆயுதங்களைக் கட்டுப்படுத்துவது குறித்து அமெரிக்க-ரஷ்யா பிரதிநிதிகள் இவ்வாரம் மாஸ்கோவில் விவாதிப்பார்கள்.

ரஷ்யா கையளித்தது

பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ள ரஷ்யாவின் கட்டுப்பாட்டிலுள்ள சினத்தீவுகளை சீனாவிடம் கொடுத்துவிட ரஷ்யா முடிவு செய்துள்ளது.

வெற்றி

இத்தாலியின் பிரதமர் திரு பெட்டினோ கிராக்ஸி நம்பிக்கைவாக்களிப்பில் 181 வாக்குகளை ஆதரவாகவும் 114 வாக்குகளை எதிராகவும் பெற்று வெற்றியீட்டினார்.

மசோதா தாக்கல்

தமிழ்நாடு சட்டமேலவையை நீக்க வகை செய்யும் மசோதாவை மத்திய சட்ட நீதித்துறை இணை அமைச்சர் நேற்று லோக்சபாவில் தாக்கல் செய்தார். (இ-ஒ)

நாளை மாநாடு

'சார்க்' அமைப்பின் வெளிவிவகார அமைச்சர்களின் மாநாடு நாளை செவ்வாய்க்கிழமை டாக்காவில் ஆரம்பமாகும்.

இலங்கை இந்தியா பாகிஸ்தான் நேபாளம் பூட்டான் மாலைதீவு பங்களாதேஷ் ஆகியநாடுகளின் பிரதிநிதிகள் இதில் கலந்து கொள்வர்.

இடைத்தேர்தல்

தமிழ்நாடு சட்டபேரவை இடைத்தேர்தலில் திருநெல்வேலியிலிருந்து 26 பேரும் அருப்புக் கோட்டையிலிருந்து 23 பேரும் போட்டியிடுவதற்காக மனுச் செய்துள்ளார்கள்.

திட்டம் உருவாகியது

இந்தியாவும் மெக்ஸிகோவும் பொருளாதார ஒத்துழைப்பை வலுப்படுத்திக் கொள்வதற்கு சட்டம் ஒன்றை உருவாக்கியுள்ளன.

15 வருடப்பூர்த்தி

இந்திய ரஷ்ய நல்லுறவுக்கான ஒப்பந்தம் அமுல் செய்யப்பட்டு நேற்றுடன் 15 வருடங்கள் பூர்த்தியாகியுள்ளன. (இ-ஒ)

முருகன் நாமம் ஒருதரம் ஓதினால் உறுபிணி தீரும்

நல்லூரில் இன்று காலை கொடியேற்றம்

முருகவழிபாடு இச்சை, கிரியை, ஞானம் ஆகிய மூன்று சக்திகளையும் ஒருங்கே அமைத்துள்ள அற்புத வழிபாடாகும். வேலைக்கையில் ஏந்தி நிற்கும் வேலவன், கருவ இரு சக்திகளைக் கூடிநிற்கும் கோலம், அவரை இச்சா, ஞானக் கிரியா சொரூபராக எமக்குக் காட்டுகின்றது. போகானுபவனாகக் காட்சி தரும் முருகன் நமக்குத்தருவது ஞான அனுபவமாகும்.

நானிலத்தில் நல்லருள் சுரக்கும் நல்லூர் நாயகன் முருகன் அவன் கலியுகவரதன் கண்கண்ட தெய்வம்.

நல்லூர் எல்லோர் நாவிலும் நவிலப்படும் நற்பெயர் அரசாட்சியின் அணி நகராக விளங்கியது அன்று. அருள் ஆட்சியின் எழில்நகராக இலங்குகின்றது இன்று. இதற்குக் காரணங்கள் பலவுள.

நல்லூரில் நண்ணி நின்று எண்ணுவார் எல்லோருக்கும் இன்னருள் புரியும் கண்ணுதல் கடவுளின் காதல் மைந்தனின் கவினுறு கற்கோயில் கலைக்கோயிலாகக் கருத்தினிக்க நிலைக்கும் அழகன் முருகனின் ஆலயத்தின் அமைப்பும் அழகும் நல்லூரின் பெயரை நான்கு திக்கும் பரப்பும்.

நல்லையின் எல்லையை நண்ணுவார்க்கு ஒருவித தெய்வீக உணர்வு ஏற்படுவது இயற்கை. ஆலயத்தின் அழகும், பொலிவும், சுற்றாடலின் தூய்மையும் அமைதியும், ஆலயப் பூசை ஒழுங்கும், அர்ச்சகர்களின் அருள் விளங்கு தோற்றமும், அடியார்களின் நல்வேடக்காட்சியும் எவரையும் பக்திப் பரவசத்தில் ஆழ்த்தும்.

முருகனின் மூவிரு முகங்களின் முகம்பொழி கருணை முழுமனதையும் மும் மடங்காக ஈர்க்க வல்லது.

நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

நல்லைக் கந்தனுக்கு உற்சவம் ஆரம்பித்து விட்டால் யாழ். குடாநாட்டில் தெய்வீகமணம் கமழ்வதைக் காணலாம்.

கந்தன் கருணை ஒளி வீசும்,இளமை நலம்வாய்ந்த ஏந்தலாகக் காட்சியளித்தபோதிலும், ஆழ்ந்த அறிவும், பரந்த ஞானமும் அருள் ஆட்சியும் உடையவன் முதிர்ந்த கிழவியாகிய ஔவைப் பிராட்டியின் அறிவின் ஆழத்தைப் பரிசோதித்து ஆட்கொண்டவன். முருகன் மூலமூர்த்தி ஈசனே அவன் ஆடலான் மகனாயினன்.

முழுமதியன்ன ஆறுமுகங்களும், மூன்றாவதாகும் விழிகளின் அழகும், வேலும், வேறுள படையின் சீரும், அழகிய கரம் ஈராறும் அணி மணித் தண்டை ஆர்க்கும் செழுமலர் அடியும் கண்டால் சென்னியை அடியிற் சூட்டி மறுபிறப்பில்லா வாழ்வு வேண்டி நிற்கத் தூண்டும்.

முருகா என்று ஒருதரம் ஓதும் அடியார் முடிமேல் இருதாள் புனைபவன் முருகன் முருகநாமம் உறுபிணிக்கு உரிய மருந்து

ஆங்காரமே ஆத்மீகத்தின் நெடும்பகை, நான் என்னும் முனைப்பு ஒழிந்த இடமே ஞான உதயம். மனித நெஞ்சத்தில் இடையறாது ஊறிப் பெருகி நிற்கும் ஆணவப் பெருநோயாம் அகந்தைக்கு ஆண்டவன் அருள் ஒன்றே மருந்து. தீரா நோய் தீர்க்கவல்லவன் அவனே. எனவே பொன்னும் பொருளும் போகமும் வேண்டாமல் நல்லூர் முருகன் திருவடியை மறவாத மனத்தையும் அவன் கோயிலுக்கு வந்து நிதம் பணிந்து போகும் வரத்தையும் வேண்டி நிற்போம்.

கனந்தா அழகு சடைந்தா உலக சகல சுக,
வினந்தா வெனவுன்னை வேண்டுகிலேன் தான் மறவா,
மனந்தா நல்லார்க்கு வரும் வரந்தா வென்று வாழ்த்துகின்றேன்.
வனந்தாவிய புனவள்ளிக்கு வாய்த்த நன் மாணிக்கமே.

-பரமேஸ்-

நரகம் நிச்சயமானது

அநேகர் வேதனைக்குரிய — பிரியமில்லாத எண்ணங்களை மறக்க விரும்புகின்றனர். நரகத்தை நினைக்க எவரும் விரும்புவதில்லை. ஆனால் இயேசு மோட்சத்தை விட நரகத்தைக் குறித்து அதிகம் கற்றுத் தந்துள்ளார்.

சிலர் நரகம் ஒரு கட்டுக்கதை என்பர். வேறு சிலர் அது ஒரு வகை முடிவு என்பர். ஆனால் வேதாகமம் என்ன சொல்கிறதென்று பார்ப்பது நன்று.

நரகம் ஆயத்தப் படுத்தப்பட்ட இடம்

அது பிசாசுக்கும் அவனுடைய தூதர்களுக்குமாக ஆயத்தம் செய்யப்பட்டுள்ளது. மத்தேயு25:41 அது மனிதருக்கு ஆயத்தப்படுத்தப்படவில்லை.

ஆனால் மனிதர் தங்களுடைய பொல்லாத கிரியையின் நிமித்தம் அங்கு செல்ல வழிதேடிக்கொள்ளுகின்றனர். துன்மார்க்கரும் தேவனை மறக்கும் எல்லா ஜாதிகளும், நரகத்தில் தள்ளப்படுவர் என்று என்று சங்கீதம் 9:17இல் கூறப்பட்டுள்ளது.

ஞானக் கதிர்

நரகத்திலுள்ள நித்திய வேதனையை ஒருவராலும் விளங்கிக்கொள்ள முடியாது. அங்கு இரவும் பகலும் வேதனையே வெளிப்படுத்திய விசேஷம் 20:10.

அங்கு புழு சாகாமலும் அக்கினி அவியாமலும் இருக்கும் என்று இயேசு சொன்னார். மாற்கு 9:46. அதின் வேதனையை மனித மனதினால் அறிந்து கொள்ள முடியாது. வெளி 14:11,

நரகம் வேதனைக்குரிய இடம்

நரகத்தில் ஜனங்களுடைய எல்லா உணர்வுகளும் செயலாற்றும். அவர்கள் காண்பார்கள் லூக்கா 16:23; உணர்வார்கள் 16:24; தாகம் உண்டாகும் 16:24; அவர்கள் கேட்பார்கள் 16:25,26; பேசுவார்கள் 16:27.

தேவன் எவராவது நரகத்துக்குப் போவதை விரும்புவதில்லை. நாங்கள் மனந்திரும்பி தப்ப வேண்டுமென்று அவர் விரும்புகின்றார். 2 பேதுரு3:9.

கிறிஸ்து எங்கள் தண்டனையையும் வேதனையையும் தம்மேல் சிலுவையில் தாங்கிச் சுமந்தார்.

இயேசு எங்களை நரகத்திலிருந்து மீட்கத்தக்கதாக எல்லாவற்றையும் செய்து முடித்துள்ளார். எங்களுக்கு முன்பாக தீர்மானம் வைக்கப்பட்டுள்ளது. ஒன்றில் அவரை ஏற்றுக்கொண்டு மீட்கப் பட அல்லது அவரை ஒதுக்கிவிட்டு நரகத்தை தேடிக்கொள்ள இன்று நீ என்ன செய்யப் போகின்றாய்.

ஜெபசேவை

சமய சந்நிதிகளில்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூசை

யாழ்ப்பாணம், ஆக. 10

சுந்தரமூர்த்தி சுவாமிகள் குரு பூசைத் தினமான 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நல்லூரில் வெயிலுகந்த ஸ்ரீவிநாயகர் ஆலயத்தில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூசையும், பெரிய புராண படனப் பூர்த்தி விழாவும் நடைபெறவுள்ளன.

அகில இலங்கைத் திருமுறைமன்றம், நாவலர் மார்க்கட்டு சைவசமய அபிவிருத்திக் கழகம், வெயிலுகந்த பண்ணிசை மன்றம் ஆகியன இணைந்து இவ்விழாவை ஒழுங்கு செய்துள்ளன.

அன்று திருத்தொண்டத் தொகை மனனப் போட்டியில் பங்குபற்றியோருக்குப் பரிசில்கள் வழங்கப்படும்.

அத்துடன் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருத்தொண்டர் தொகை என்னும் நூல் இலவசமாக வெளியிடப்படும். (இ-10)

ஆதீனத்தில்

யாழ்ப்பாணம், ஆக. 10

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசைத் தினம் கொண்டாடப்படவுள்ளது.

காலை 9 00 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ குருமகா சன்னிதானம் அவர்களின் ஆசியுரையும் தொடர்ந்து திரு.க உமாமகேஸ்வரன் "இன்னுமொருக்கால்" என்னும் பொருள்பற்றி உரையாற்றுவார்.

மாலை 2-00 மணிக்கு திரு. ந. தர்மலிங்கமும் திரு. கு. குருநாதபிள்ளையும் சொற்பொழிவாற்றுவார்கள்.

மாலை 3.00 மணிக்கு சிறப்புரையாகச் சுந்தரர் சுகித்த இன்பம் பற்றி ஆத்மஜோதி திரு. நா. முத்தையா உரையாற்றுவார். (ஒ)

பொய்யாமொழி

குறள்:
அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி.

பொருள்:
வறியவரின் கடும் பசியைத் தீர்க்க வேண்டும்; அதுவே பொருள் பெற்ற ஒருவன் அப்பொருளைத் [illegible] இடமாகும்.

வித்தாரம்

என்ன முரளியார், காலையிலேயே நல்லூர்க் கந்தனைத் தரிசித்தாச்சுப் போல. மெத்த நல்லது. தொடரட்டும் ஆனை தரிசனம்.

கோயில் திருவிழாக்களைச் சொல்லுறதில கூட கலண்டருக்கு கலண்டர், பஞ்சாங்கத்துக்குப் பஞ்சாங்கம் வித்தியாசம் இருக்கடா தம்பி.

ஒண்டில பத்தெண்டால் அடுத்தது பதினொண்டு எண்டு சொல்லும் நவராத்திரி, ஆடி அமாவாசை, சித்திரை வருஷப்பிறப்பு போன்ற முக்கிய தினங்களைக் கூடச் சரிவரக் கண்டு பிடிக்க முடியாத கஷ்டம் சனத்துக்கு. பஞ்சாங்கங்கள், கலண்டர்கள் இது 'விஷயத்தில் அடிக்கடி முரண் படுவது உண்டு. இதைத் தவிர்க்க அவை முயற்சி எடுக்கக் கூடாதே?

வியாபாரத்தில போட்டி, அதில போட்டி இதில போட்டி என்டு தமிழ் ஆக்கள் கிரைக்கடைக்கும் எதிர்க்கடை போடுற சுபாவம் உள்ளவை என்டது நான் சொல்லியோ உனக்குத் தெரிய வேணும். சங்கங்கள் உண்டாக்கிறதில இருக்கிற போட்டியள் உனக்குத் தனிப்பட்ட பாடம் எல்லே. அதே போட்டி விஷயங்களில பிழை விடுற நிலையும் இருக்கத் தான் செய்யுது பார்த்தியே....

இனி என்ன 25 நாளைக்கு உனக்குப் பொழுது போகும். நாங்கள் தான் பேப்பர்காரர். அது தானப்பா பத்திரிகையாளர்— செய்தியாளர் எங்களுக்கு எங்கே உதுக்கெல்லாம் நேரம்..

ஆனால் பத்திரிகைக்காரருக்கு எத்தனையோ ஆபத்தும் கஷ்டமும் இருக்குது எண்டு சனத்துக்கு விளங்கிறதில்லை.

உனக்குத் தெரியுமே, தமிழ்ப் பத்திரிகையாளர் திரு இ. சந்தசாமி இப்ப 90 நாளைக்கு மேலாக அரச முகாமில இருக்கிறார்.

யாழ்ப்பாணத்துச் சோதரப் பத்திரிகை ஒண்டின்ர கொழும்புச்செய்தியாளர் அவர் அவர் எழுதின செய்திதான் தப்பு எண்டு கண்டு அரசாங்கம் அவரை முகாமுக்கு அனுப்பவில்லை கொழும்புக் கந்தோரில இடைச் சில அடிதடிகளை யாழ்ப்பாணக் கந்தோருக்கு அவர் அனுப்பியது தப்பா?

ஒரு பத்திரிகையாளனின் பணி எவ்வளவு காத்திரமானதுஎன்பதை அரசாங்கம்|உணரவில்லையா?

சந்தேகம் எதுவும் இருந்தால் உடனடியாக அது பற்றி விசாரித்தே நடவடிக்கை எடுக்கவேணும். ஒண்டுமே செய்யாமல் முகாமில் வைத்திருப்பது அடாத்து.

தமிழ்ப் பத்திரிகையாளன் எண்டதாலோ என்னவோ இலங்கையில இருக்கிற பத்திரிகையாளர் சங்கங்களும் இதுவிஷயத்தில மௌனம் சாதிக்குதுகள்.

உள்நாட்டுப் பத்திரிகைக்காரரை மட்டுமில்லை உண்மை எழுதிற வெளிநாட்டுப் பத்திரிகைக்காரரிலும் அரசு அதிகாரிகளுக்கு கோபம். பி. பி. ஸி. ஹொக்ஸ்லிக்கு என்ன நடந்தது பார்த்தியே!

உள்ளதைச் சொன்னால் உடம்பெல்லாம் நோகிற சுபாவம் அரசாங்கத்துக்கும், அதன் அதிகாரிகளுக்கும் அதால உண்மை சொல்லுறவரை, பொய் சொல்லுகினம் தப்புச் செய்திச்சினம் எண்டு சொல்லித் தண்டிக்கப் பார்க்குது.

உண்மை உண்மை தான். அதுஅழியாதது ஒரு ஹொக்ஸ்லியை வெளியேத்தினால் ஒன்பது ஹொக்ஸ்லிகள் உண்மையை உலகுக்குச் சொல்லுவினம். இந்தச் சின்ன விஷயம் உந்தப் பெரிய அதிகாரிகளுக்கு விளங்கயில்லையே...

கொண்டோடி

Radio & T. V. Engineering Course
6 Months - Week Ends
Lecturer:- Mr. E. KANAPATHIPILLAI
Fees; 250/- per Month
For Further Details:
Cantabia Institute
21, Main Street, Jaffna.
T'Phone: 24201

உதயன்

10-08-1986 ஞாயிற்றுக்கிழமை

COMPUTER PROGRAMMING
and
DATA PROCESSING COURSE
BASIC LANGUAGE
6 MONTHS
Commencement 27-7-86
Fees; 1500/-
Cantabia Institute
21, Main Street, Jaffna.
T'Phone 24201

பொருள்கள் கடத்தலை அடுத்து

கரடிப்போக்கு மதகு திருத்தவேலை தடைப்பட்டது

கிளிநொச்சி, ஆக. 10 கிளிநொச்சி கரடிப் போக்கு மதகைத் திருத்துவதற்குக் கொண்டு வரப்பட்ட பொருள்கள் கடத்தப்பட்டதால் திருத்த வேலைகள் தடைப்பட்டுள்ளன.

கிளிநொச்சி பிரதான கண்டி வீதியில் உள்ள இப்பாலம் கடந்த ஜூன் மாதம் கிளிநொச்சியில் ஏற்பட்ட அசம்பாவிதங்களின்போது இனம் தெரியாதவர்களால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது.

இதனால் கண்டி வீதியிலான சகல வாகனப் போக்குவரத்துக்களும் தடைப்பட்டு உள்ளூர் வீதிகளூடாகப் போக்குவரத்துக்கள் நடைபெற்றுவந்தன.

இவ்வாறு அழிந்த மதகை உடனடியாக திருத்த கிளிநொச்சி மாவட்ட இராணுவ இணைப்பதிகாரி எடுத்த நடவடிக்கையைத் தொடர்ந்து பெருந் தெருக்கள் திணைக்களம் திருத்தும் முயற்சியில் ஈடுபட்டது.

திருத்த வேலைகளுக்கென கொண்டு வரப்பட்ட இரும்புக் கேடர்களே கடந்த செவ்வாய்க்கிழமை கடத்தப்பட்டுள்ளன என்று தெரிய வருகிறது. (இ-76)

விரையுங்கள்!
பரிசு வெல்லுங்கள்!!

உதயன் - சஞ்சீவி நல்லூர் உற்சவகால அறிவுப் போட்டி

1. இப்போட்டியில் உதயன் - சஞ்சீவி வாசகர்கள் எவரும் பங்குபற்றலாம்.
2. கீழே காணப்படும் விருப் படிவத்தைப் பூர்த்திசெய்து, நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள பெட்டிக்குள் இடவேண்டும்.
3. போட்டி முடிவு திகதி: 01-09-1986
4. சரியான விடைகள் எழுதியவர்களின் படிவங்கள் தெரிவுசெய்யப்பட்டு, தீர்த்தோற்சவமான 03-09-86 ஆம் திகதி காலை 10 மணிக்கு ஆதீனத்தில் வைத்து அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டு அங்கு வைத்தே உடன் பரிசுகள் வழங்கப்படும்.
5. பரிசுகள்; வெகுமதிமிக்க 5 பரிசுகளும், ஆறுதல் பரிசுகளும் உண்டு.
6. போட்டியாளர் பெயர்:

முகவரி:

கையொப்பம்:

7. விருப்படிவம்

அ) தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில் உள்ள ஆலயங்களின் அட்டவணை ஒன்றினைத் தமது உபயோகத்திற்கு எழுதிய வெளிநாட்டவர் யார்?

ஆ) "கோலமர கதமஞ்சை வாகன வபமென் குறைதகிர்த் தாண்டருள்வாய்" — என்று நல்லூர் முருகப்பெருமானைப் பாடியவர் பெயரைக் கூறுக?

இ) நல்லூர்க் கோயிலில் நடைபெறும் அர்த்த சாமப் பூசையை பலமுறை கண்டு மனமுருகி வழிபட்டு அப்பூசையைப் பற்றி எழுதியவர் யார்?

ஈ) நல்லூரான் தேரடியில் தனது குருவைக் கண்டு அருள்பெற்ற ஞானியின் பெயரைக் கூறுக?

உ) நல்லூர் முருகனை
"பேறுபெற்ற பிணிமுக வூர்தியில் ஏறு சேவகன்" என்று பாடியவர் யார்?

ஊ) தண்டாயுதபாணி கோயில், நல்லூர் ஆலயத்தில் எங்கே அமைந்துள்ளது?

எ) நல்லைக் குறவஞ்சி யாரால் பாடப்பெற்றது?

ஏ) நல்லூரானின் தற்போதைய சித்திரத்தேரை உருவாக்கிய சிற்பாச்சாரியாரின் பெயர் என்ன?

ஐ) நல்லூர் கந்தசுவாமி கோயிலில் நடைபெறும் கார்த்திகைத் திருவிழாவை நயந்து பாடியவர் யார்?

ஒ) நல்லூர் கோயிலில் "கட்டியம்" கூறப்படும் போது யாருடைய பெயர் பிரதான இடம் பெறுகின்றது?

யாழ் பல்கலைக்கழகம்:

புதிய மாணவருக்கான ஆங்கில வகுப்புகள் பின்போடப்பட்டன

யாழ்ப்பாணம், ஆக. 10 யாழ் பல்கலைக் கழக புதிய மாணவருக்கான ஆங்கில வகுப்புக்கள் பின்போடப்பட்டுள்ளன.

இம்மாதம் 20 ஆம் திகதி இவ்வகுப்புக்கள் ஆரம்பமாகும் என்று யாழ் பல்கலைக்கழகப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

புதிய மாணவர்களுக்கு நடத்தப்பட்ட ஆங்கில தகுதிக்கான பரீட்சை முடிவுகளும் அன்றே அறிவிக்கப்படும்.

முன்னர் இத்திகதி 11 ஆக இருந்தது கடந்த மூன்று நாட்களாக பல்கலைக்கழகத்தில் நடைபெற்று வரும் பகிஷ்கரிப்பாலேயே இந்தத் திகதி 20 க்குப் பின்போடப்பட்டது (இ-5)

உபதபால் அதிபருக்கு மின்கம்ப மரண தண்டனை

மன்னார், ஆகஸ்ட் 10 நேற்று முன்தினம் அதிகாலை மன்னார், தாழ்வுபாடு உபதபால் அதிபர் எம். எல் டயஸ் மின்கம்ப மரணதண்டனைக்கு ஆளானார்.

ஆயுதப் படையினருக்குப் போராளிகள் குறித்து தகவல் கொடுத்ததற்காக இவர் முதல் நாள் கடத்தப்பட்டார்.

சம்பவ தினம் காலை அவர் கண்கள் கட்டப்பட்டபடி தாழ்வுபாடு உபதபால் நிலையம் முன்பாகக் கொண்டுவரப்பட்டார். பின்னர் தாம் செய்த குற்றங்களைப் பொதுமக்கள் முன்னிலையில் அவர் ஒப்புக் கொண்டார்.

அதைத் தொடர்ந்து உபதபால் நிலையம் முன்பாக உள்ள மின்கம்பத்தில் அவர் கட்டப்பட்டு சுடப்பட்டார். (இ-எ)

நூலகத் திறப்பு விழா

வட்டுக்கோட்டை, ஆக.10 வட்டுக்கோட்டை கலைவாணி கல்வி நிலையத்தின் நூலகத்திறப்பு விழா இன்று பிற்பகல் 3 மணியளவில் திரு ஈ. யோகசரன் தலைமையில் நடைபெறும்.

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி ஆசிரியர் திரு. வ. யோகானந்தசிவம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு நூலகத்தை திறந்து வைத்து உரையாற்றுவார்.

கலைவாணி கல்வி நிலைய மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும் செல்வி ஞா. ஜெயரஞ்சினி நன்றி கூறுவார். (இ-161)

கூட்டம்

வேலணை, ஆக 10 யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாசக் கூட்டம் இன்று ஞாயிறு காலை 9.30 மணிக்கு [illegible] சன்மார்க்க சனசமூக நிலைய மண்டபத்தில் திரு. ம. சி. தவராசா தலைமையில் நடைபெற இருக்கின்றது. (இ)

லங்கா சிமெந்து அணி வெற்றி

காங்கேசன்துறை, ஆக.10 காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத்தாபன குழுவுக்கும், லங்கா சிமெந்து லிமிட்டெட் குழுவுக்கும் இடையில் நடந்த கிரிக்கெட் போட்டியில் 'எம். டி. ஜே. எவ் ஜெயமான' வெற்றிக் கேடயத்தை லங்கா சிமெந்து அணி தட்டிக் கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய லங்கா சிமெந்து அணியினர் சிறப்பாக ஆடி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 98 ஓட்டங்களைப் பெற்றனர்.

பின்பு துடுப்பெடுத்தாடிய சிமெந்து கூட்டுத்தாபன அணியினர் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 63 ஓட்டங்களைப் பெற்றனர். 35 மேலதிக ஓட்டங்களினால் ஜெயமான வெற்றிக் கேடயத்தை லங்கா சிமெந்து அணி தட்டிக் கொண்டது.

கூட்டுத்தாபன முகாமையாளர் திரு. நாகராசா வெற்றிக் கேடயத்தை லங்கா சிமெந்து அணியின் தலைவரான ஆலை முகாமையாளர் திரு ரஞ்சிதபாலனுக்கு வழங்கினார்.

இவ்வாட்டத்தில் சிறந்த ஆட்டக்காரராக திரு தேவானந்தமும் சிறந்த துடுப்பாட்டக்காரராக திரு தர்மராஜாவும், சிறந்த பந்து வீச்சாளராக திரு. ஆம்வாப்பிள்ளையும், சிறந்த தடுப்பாளராக திரு ஸ்ரீதர்சனும் தெரிவு செய்யப்பட்டனர்.

மேற்படி இரு ஸ்தாபனங்களின் குழுக்களுக்கிடையில் நடந்த உதைபந்தாட்டப் போட்டியிலும் லங்கா சிமெந்து அணியினர் வெற்றி சூடி 'காமினி ஹஜநாயக்கா' வெற்றிக் கேடயத்தைப் பெற்றனர்.

மிகவும் விறுவிறுப்பாக நடந்த இப்போட்டியில் லங்கா சிமெந்து அணியைச் சேர்ந்த பரமதேவா, மேரராஜா, தேவலிங்கம் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் போட்டனர். போட்டி முடிவில் லங்கா சிமெந்து அணி 3-1 என்ற கோல்கணக்கால் வெற்றி பெற்றது.

வெற்றிக் கேடயத்தை லங்கா சிமெந்து ஆலைப் பராமரிப்புப் பகுதி முகாமையாளர் திரு. அசோகராஜா லங்கா சிமெந்து அணித் தலைவர் திரு. அனரன் ஜெயக்குமாருக்கு வழங்கினார். (இ-68)

சிவில் போக்குவரத்து நிர்வாகத்துக்கு

மினிபஸ்சங்க ஒத்துழைப்பு கோருகிறார் ஆணையாளர்

யாழ்ப்பாணம், ஆக. 10 சிவில் போக்குவரத்து நிர்வாகத்திற்கு மினிபஸ், தனியார் போக்குவரத்து சங்கங்கள் ஒத்துழைக்க வேண்டும்.

யாழ் மாநகர ஆணையாளர் திரு சி. வி. கே. சிவஞானம் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்று நடைபெற்ற மினிபஸ் சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்ட கூட்டத்திலேயே இவ்வாறு அவர் கேட்டுக் கொண்டார்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களாவன:

* வேகத் தடைகளாக போடப்பட்டுள்ள மேடுகள், வாய்க்கால்கள் என்பன தூர்க்கப்படும். வாகனங்கள் வேகக்கட்டுப்பாட்டை அனுசரிக்க வேண்டும்.

* ஒருவழிப் பாதைகளை இருவழிப் பாதையாக பாவிக்கக்கூடாது.

* யாழ் சுபாஸ் கபே முன்னால் பெற்றோல் விற்பவர்கள் அகற்றப்படவேண்டும்.

* நடைபாதை வியாபாரிகளுக்கென ஒரு மினி சந்தை உருவாக்கிக் கொடுக்கப்படும். நகரில் உள்ள நடைபாதை வியாபாரிகள் அகற்றப்படவேண்டும்.

* பிரயாணிகளை ஏற்றிக் கொண்டிருக்கும் மினிபஸ் தவிர்ந்த மற்றைய மினிபஸ்கள் பஸ் நிலையத்தை சுற்றியுள்ள பகுதிகளில் நிறுத்தப்படுவதால் போக்குவரத்துத் தடை ஏற்படுகிறது இதனால் மேலதிக மினிபஸ்கள் விக்டோரியா வீதியிலும் தாதிமார் பயிற்சிக் கல்லூரி முன்னாலும் நிறுத்தப்படவேண்டும். (இ-5)

சம்பல் பள்ளத்தாக்கு கொள்ளைக்காரி சுட்டுக் கொலை!

குவாலியூர், ஆக. 9 சம்பல் பள்ளத்தாக்கின் பிரபல கொள்ளைக்காரி ராணி முனிபாய் சுட்டுக் கொல்லப்பட்டாள்.

22 வயதான இந்த 'ராணி'யின் முழுப் பெயர் முனிபாய் கோலங்கி.

30 பேரைக் கொலை செய்த அவளை சுட்டுக் கொன்றவர் குவாலியூர் பொலீஸ் அதிபர் திரு பி எல் அத்வால்.

அவளின் பேரழகு சுடுவதற்கு முன்னர் என்னை தயங்கச் செய்தது — இப்படி பொலீஸ் அதிபர் அத்வால் சொன்னார்.

அவளின் பிரேதத்தை சோதனை இட்ட போது மேக்கப் சாதனங்கள், 70 சுற்றுத் தோட்டா, அமெரிக்கத் தயாரிப்பான தானியங்கி ரைபிள் இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டன.

புதுடில்லியில் இருந்து 160 மைல் தொலைவில் சம்பல் பள்ளத்தாக்கில் வைத்து அவள் சுட்டுக் கொல்லப்பட்டாள்.

கடந்த மார்ச்சில் அவளின் காதலன் பாபா சுட்டுக் கொல்லப்பட்டான்.

காதலனைப் பொலீஸார் சுட்டுக் கொல்வதற்கு உதவி புரிந்தவனைத் தேடிப் பிடித்து பழி தீர்க்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போதே முனிபாய் மரணத்தைச் சந்திக்க நேர்ந்தது. (இ-எ)

மட்கோவ்-;--

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தப்பட்டுள்ளது.

தாக்குதலின்போது இலங்கை துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமான பல படகுகள், வாகனங்கள் சேதமாக்கப்பட்டன.

அத்துடன் தாக்குதலின்போது சில ஆயுதங்களும், பெரும் தொகையான தோட்டாக்களும் சக்திமிக்க தொலைத் தொடர்பு சாதனங்களும் மக்கள் விடுதலைப் படையினரால் கைப்பற்றப்பட்டன.

எமது தரப்பில் எதுவித இழப்பும் ஏற்படவில்லை. இத்தாக்குதலின் போது எம்மால் சிறைப் பிடிக்கப்பட்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தாக்குதல் பூர்த்தியானவுடன் விடுவிக்கப்பட்டனர்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. (இ)

நல்லைக்கந்தன்---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சாரணர்கள் முதலுதவிப் படையினர் ஈடுபடுவர்.

திருவிழாக்கள் தினமும் மாலை ஐந்து மணியுடன் நிறைவு பெறும். இக்காலத்தில் நல்லை ஆதீனத்தில் அருளுரைகளும் இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன.

26 ஆவது வருடமாக திருவிழாக் காலத்தில் சாரண சேவைக்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. (இ-எ-10)

திரியாய் அகதிகளை திரும்பிச் செல்ல உத்தரவு

யாழ்ப்பாணம், ஆக. 10 திருகோணமலை திரியாய் பகுதிகளிலிருந்து அசம்பாவிதங்களினால் இடம்பெயர்ந்து முல்லைத்தீவு வந்துள்ள அகதிகளை திரும்பிச் செல்லுமாறு அரசு பணித்துள்ளது.

திருகோணமலையிலிருந்து 1200 குடும்பங்கள் வரை முல்லைத்தீவுக்கு அகதிகளாக வந்துள்ளன.

இவர்களுக்கான உதவி நிவாரண உணவுப் பொருள்களை கடந்த மூன்று மாதங்களாக புனர்வாழ்வு அமைச்சு அளித்து வந்தது.

இதில் அடங்கும் திரியாய் பகுதியை சேர்ந்த சுமார் 500 குடும்பங்களுக்கு இம்மாதம் ஒரு வார உணவுப் பொருள்களே வழங்கப்பட்டன.

இவர்களை மீண்டும் திரியாய்ப் பகுதிக்கு [illegible] அமைச்சு பணிக்[illegible] இவர்களில் 10 பேர் கொண்ட குழு ஒன்றை திருமலை அரச அதிபரை சந்திக்கும்படியும் கேட்டுள்ளது.

அண்மையில் திரியாய் பகுதியில் மீண்டும் நடைபெற்ற ஊர்காவல் படையினரின் அட்டகாசத்தால் ஒருவர் பலியாகியிருந்தார்.

இதனால் திரியாய் பகுதி அகதிகள் என்ன செய்வது என்று தெரியாது தவிக்கிறார்கள். (இ-5)

பள்ளிவாசல் தலைவர்கள் ஆராய்வு

மட்டக்களப்பு ஆக 10 வடக்கு, கிழக்கு இணைப்பு பற்றி மட்டக்களப்பு, அம்பாறை, திருமலை மாவட்ட பள்ளிவாசல் [illegible] அக்கரைப்பற்றில் கூடி [illegible]றனர். (இ-எ-21)

முஸ்லிம் - ளும்---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சபைகளை அமைப்பதில் என்ன பிழை உண்டு?

ஏழு மாகாணங்கள் பற்றி எமக்குப் பிரச்சினை இல்லை முஸ்லிம்கள், சிங்களவருடன் சேர்ந்து வாக்களித்தால் கிழக்கு மாகாண நிர்வாகமும் எமது கைக்கு வந்து விடும்; திரு. அமிர்தலிங்கத்தின் கட்சியோ, ஈழம்வாதிகளின் கைகளுக்கோ போகாது.

வடக்கு மட்டும்தான் தனித்து நிற்கும் ஒற்றை ஆட்சி அமைப்பின் கீழ்தான் வடக்கும் செயல்படவேண்டும். ஒவ்வொரு மாகாணத்துக்கும் ஒவ்வோர் ஆளுநரை ஜனாதிபதி நியமிப்பார்.

அந்த ஆளுநர்தான் முதலமைச்சருக்கு விசுவாசப்பிரமாணம்செய்து வைப்பார். பதவி இழக்கும் அமைச்சர்களை ராஜினாமா செய்யவைப்பார், மாகாண சபைகளைக் கலைப்பார்—இவ்வளவும் ஆளுநரின் பணி ஜனாதிபதியின் பிரதிநிதி தான் ஆளுநர்.

சர்வசன வாக்கெடுப்புக்கு உள்ளாகாத முறையில்தான் மாகாண சபைச் சட்டமூலம் தயாரிக்கப்படும்.

இப்படி ஜனாதிபதி சொன்னார். (இ-எ)

தமிழ்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தில் உள்ள தமிழ் பேசும் பகுதிகளைச் சேர்த்து ஒரு பிராந்தியத்தை அல்லது மாகாணத்தை அமைப்பதன் மூலம் தான் ஓரளவாவது தமிழர்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்ய முடியும் என்பதை கூட்டணித் தலைவர்கள் புதுடில்லியில் வைத்து இந்திய அதிகாரிகளிடம் தெட்டத் தெளிவாகக் கூறிவிட்டனர்.

இதைத் தொடர்ந்து தான் இந்தியா, தமிழ் மொழிப் பிராந்தியம் அமைக்கும் விஷயத்தை ராஜதந்திர வட்டாரங்கள் மூலம் இலங்கைக்கு தெரிவித்துள்ளது (அ-எ)

புலிகள்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கும் பலத்த காயங்களுக்கு உள்ளானார்கள்.

எமது தரப்பினர் எதுவித சேதமும் இன்றி முகாம் திரும்பினர்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது (இ)

மயிலணி வடக்கு வளர்பிறை நடத்தும் விளையாட்டுப்போட்டி

உடுவில், ஆக. 10 சுன்னாகம் மயிலணி வடக்கு வளர்பிறை விளையாட்டுக்கழகத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு மாபெரும் விளையாட்டு விழா ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

பல சுற்றுப்போட்டிகளை நடத்த முன்வந்துள்ள வளர்பிறை விளையாட்டுக் கழகத்தினர் யாழ் மாவட்டத்தில் உள்ள சகல விளையாட்டுக் கழகங்களையும் சுற்றுப் போட்டியில் பங்கு பெற அழைக்கின்றனர்.

7 பேர் விளையாடும் உதைபந்தாட்டம், 18 ஓவர் மட்டுப்படுத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட், கரபந்தாட்டம் (ஓவர் கேம்), கரபந்தாட்டம் (செற்ஸப் கேம்) வலைபந்தாட்டம் (பெண்கள்), தாச்சிப் போட்டி (ஆண்கள்), தாச்சிப்போட்டி (பெண்கள்) ஆகிய சுற்றுப் போட்டிகளை ஒழுங்கு செய்துள்ளனர். (இ- 27)

புங்குடுதீவு விளையாட்டுக் கழகங்கள் ஒன்றாக இணைவு

வேலணை, ஆக 10 புங்குடுதீவில் உள்ள அனைத்து விளையாட்டுக் கழகங்களும் ஒன்றிணைந்து புங்குடுதீவு விளையாட்டுச் சங்கம் ஒன்றை அமைத்துள்ளன.

இதற்கான ஆரம்பக் கூட்டம் அண்மையில் புங்குடுதீவு மகாவித்தியாலய மண்டபத்தில் வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவு விளையாட்டு உத்தியோகத்தர் திரு. கு. பீலிக்ஸ் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு புங்குடுதீவு விளையாட்டுக் கழக உறுப்பினர்கள் ஐம்பதிற்கு மேற்பட்டவர்கள் கலந்து கொண்டார்கள்.

இந்த சங்க ஆதரவில் மறைந்த மா. சி. நல்லதம்பி ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்திற்கான ஏழுபேர் கொண்ட நொக்கவுட் உதைபந்தாட்டப் போட்டி எதிர்வரும் 16 ஆம், 17ஆம் திகதிகளில் புங்குடுதீவு மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெற உள்ளது.

இதில் தீவுப்பகுதியிலிருந்து 19 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்ற இருக்கின்றன. (இ)

கிளிநொச்சி----

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கள் கேட்டன. இதைத் தொடர்ந்து துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் கேட்டன.

இதனால் மக்கள் என்னவோ ஏதோ என அச்சத்துடன் நித்திரையுமின்றி விழித்திருக்க நேர்ந்தது.

7 ஆம் திகதி இரவு இடம் பெற்ற குண்டு வெடிப்பில் பிரதான கண்டி வீதியில் மதகு ஒன்று தகர்க்கப்பட்டதாகத் தெரியவருகிறது. (இ - 76)

மண் அள்ளிய---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களுக்குப் பயன்படுத்தவே மண் என்று டிராக்டரில் வந்த ஊழியர்கள் தெரிவித்தனர்.

கடற்கரை மண் ஏற்றுவது சட்டவிரோதம்; தண்டப்பணமாக 400 ரூபா செலுத்தவேண்டும் —இப்படி உத்தரவிட்ட அந்த இளைஞர்கள் தண்டப்பணத்தை வசூலித்து விட்டே சென்றனராம். (இ - எ - 84)

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலையவீதி, இரண்டாம் ஒழுங்கை 15 - ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 10 — 08 — 1986
Printed and Published by Uthayan Publications (Private) Ltd
15 Second Lane, Power House Road, JAFFNA.
Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka Under Number QJ 60 N 86